இழந்து தவிக்கின்ற குடும்பம் இன்றைக்கு வருமானம் இல்லாமல் தவித்துக் கொண்டிருக்கிறது. அந்தக் குடும்பத்திற்கு ஏதாவது ஒரு நிவாரண உதவியை அரசு செய்யவேண்டுமென்று இந்த நேரத்திலே நான் கோருகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆகஸ்ட் 30 ஆம் தேதி முழு அடைப்பு தொடர்பாக நடைபெற்ற ஒரு கலவரம். காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த தொழிலாளர்களுக்கும் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்த தொழிலாளர்களுக்கும் இடையிலே ஏற்பட்ட கலவரத்தில் கைது செய்யப்பட்டவர்களிலே ஒருவர் நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் திரு. நூர்முகமது அவர்கள் குறிப்பிடுகின்ற கோபி அவர்கள் ஆவார்கள். எனக்குத் தரப்பட்டுள்ள தகவல்களின்படி அவருக்கு ஏற்கெனவே சர்க்கரை வியாதி இருந்ததாகவும் அதன் காரணமாக சப்-ஜெயிலில் அவருக்கு நோய் ஏற்பட்டு சிகிச்சைக்காக குழித்துறைஅரசு மருத்துவமனைக்கு அனுப்பப்பட்டதாகவும் அங்கிருந்து நான்காவது நாள் மேலும் அவசரச் சிகிச்சைகள் தேவைப்பட்ட காரணத்தால், அத்தியாவசிய சிகிச்சைகளுக்காக, உரிய சிகிச்சைக்காக நாகர்கோயில் மருத்துவமனைக்கு அனுப்பப்பட்டதாகவும் அங்கே சிகிச்சை பலன் அளிக்காமல்மரணம் அடைந்து விட்டார் என்றும் செய்தி வந்திருக்கிறது. பிரேத பரிசோதனையிலே அவர் மீது தாக்கப்பட்ட ஒரு சூழ்நிலையில் எந்த அடிகளோ காயங்களோ இல்லையென்று சொல்லப்பட்டிருக்கிறது. இருந்தாலும் மாண்புமிகு உறுப்பினர் இங்கே எழுப்புகின்ற இந்தக் கோரிக்கை அந்த மாவட்டத்திலும்தொழிலாளர்கள் சார்பாக எழுப்பப்பட்டுள்ள காரணத்தினால் இது குறித்து ஒரு நீதி விசாரணை நடத்த மாவட்ட நீதிபதி அளவில் திரு. இராமமூர்த்திஅவர்கள்நியமனம் செய்யப்பட்டு, விசாரணை நடத்துமாறு உத்தரவு இடப்பட்டிருக்கிறது என்பதையும் நான் அவருக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மற்றொன்று, அந்தக் குடும்ப நிதிகளைப் பற்றியெல்லாம் சொன்னார்கள். அதைப்பற்றி பரிசீலித்து மாவட்ட ஆட்சித் தலைவருடைய கருத்துரை கோரப்படும்.

(ஓ) கோவில்பட்டியையொட்டியுள்ள கிராமங்களை சங்கரன் கோவில் வட்டத்திலிருந்து பிரித்து கோவில்பட்டி வட்டத்தில் சேர்த்தல்

திரு. சோ. அழகர்சாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்கு ஒரு வி யத்தைக் கொண்டுவர விரும்புகிறேன். மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் கடந்த சட்ட மன்ற கூட்டத் தொடரின் கடைசி நாளன்று அல்லது அதற்கு முன்னாலே ஒரு கவன ஈர்ப்புத் தீர்மானத்திலே பதில் சொன்னார்கள்.

11.00 மணி

அழகர்சாமி தீர்மானத்திற்கு அவருக்கு மகிழ்ச்சி அளிக்கக்கூடிய பதில் சீக்கிரம் சொல்லப்படும் என்று சொன்னார்கள். என்னுடைய தொகுதியைப் பொறுத்தவரையில் இப்போது இரண்டு மாவட்டங்கள் சேருகிற பகுதியில் வருகிறது. முன்னால் ஒரு மாவட்டமாக இருந்தது. கோவில்பட்டியை ஒட்டியுள்ள சில கிராமங்களை, கோவில்பட்டி தாலுக்காவுடன் இணைத்தால்தான் எங்களுக்கு பல சமூகநலன்களைக் கவனிக்க முடியும். இப்போது அந்தப் பகுதி மக்கள் தாலுக்கா அலுவலகம் செல்ல வேண்டுமென்றால் திருநெல்வேலி போன்ற 30 மைல்களுக்கு அப்பால் உள்ள அலுவலகங்களுக்குச் செல்ல வேண்டியிருக்கிறபடியால் அது தொடர்பாக பல்வேறு கோரிக்கைகளைவைத்திருக்கிறார்கள். ஏற்கெனவே அது சம்பந்தமாக 10 ஆண்டுகளுக்கு முன்னால் இதுபோன்ற கோரிக்கை வைக்கப்பட்டு அது அரசாங்கத்தின் பரிசீலனையில் இருக்கிறது. எனவே சீக்கிரமாக அது முடிவு செய்யப்படும் என்று சொன்னார்கள். கோவில்பட்டியை ஒட்டியுள்ள கிராமங்களை சங்கரன்கோயில் வட்டத்திலிருந்து பிரித்து கோவில்பட்டி வட்டத்தில் சேர்ப்பது என்றும், கோவில்பட்டி விளாத்திகுளம், ஒட்டப்பிடாரம் போன்ற 3 தாலுக்காக்களில் இருந்து சில பகுதிகளைப் பிரித்து எட்டயபுரம் தாலுக்கா என்று அமைப்பதற்கான கோரிக்கை ஒன்று ஏற்கெனவே அரசாங்கத்தின் பரிசீலனையில் இருக்கிறது என்றும் சொன்னார்கள். அதை அமைச்சர் அவர்கள் நிறைவேற்றித் தருவார்களா? அந்த வட்டார மக்களின் நீண்டநாள் கோரிக்கை இது. இந்த முயற்சியில் அவர்கள் ஈடுபட்டிருக்கிறார்கள்.

மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன் : அந்த ஏற்பாட்டில் ஒரு பகுதியை ஏற்கெனவே இந்த அரசு செய்து முடித்துவிட்டதென்பதை மாண்புமிகு திரு. அழகர்சாமி அவர்கள் அறிவார்கள் என்று நான் நம்புகிறேன். தொடர்ந்து சொன்ன அந்த பிரச்சினையை இந்த அரசு பரிசீலிக்கும். ஏனென்றால் நியாயமான கோரிக்கையை வைப்பவர் நீங்கள் என்பதை நான் அறிவேன்.

(ஓ) புதிய மோட்டார் வாகனச் சட்டத்தில் ஓட்டுநர்களுக்கு விதிக்கப்பட்டுள்ள கல்வித் தகுதிகள் குறித்து.

திரு. பி. எச். பாண்டியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மோட்டார் வாகன ஓட்டுநர்கள் பிரச்சினையை மாண்புமிகு சட்ட அமைச்சர் மற்றும் மாண்புமிகு போக்குவரத்து அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்கும் நான் கொண்டு வருகிறேன். நான் ஏற்கெனவே மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடம் பேசியிருக்கிறேன். புதிய மோட்டார் வாகனச் சட்டத்தில் ஓட்டுநர்களுக்கு கல்வித் தகுதி வேண்டுமென்று புதிதாக இயற்றி